# Deposition of Witness

**(Chapter XXXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.60 /2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : LW5 / PW4 |
| Name | : Prabu |
| Father Name/Husband Name | : Shanmugam |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.04.2022

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை:-**

நான் தற்போது கம்மியன்பேட்டை குப்பன்குளம் சமாதிதோப்பில் வசித்து வருகிறேன். நான் காய்கறி கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் வழக்கில் இறந்துபோன ராமு எனது அண்ணன் ஆவார். 30.03.2014 ம் தேதி மதியம் 01.30 மணியளவில் நான் வியாபாரத்தை முடித்துவிட்டு என் வீட்டிற்கு வந்து வண்டியை நிறுத்தும்போது கம்மியன்பேட்டை ஒருவழிப் பாதையில் ஈச்சர் மீன் பாடி வண்டி அதிவேகமாக வந்து என் அண்ணன் வீட்டின் பக்கத்தில் தர்பூசணி விற்றுக்கொண்டிருந்த நபரான மாயாண்டி என்பவர் மீது மோதியது. அதனால் அவருக்கு வலது காலில் அடிப்பட்டது. பின்பு அதே வேகத்துடன் வண்டி என் அண்ணன் வீட்டின் பக்கத்திலுள்ள மின்கம்பத்தின் மீது மோதி என் அண்ணன் வீட்டின் மீது சாய்ந்தது. வீட்டினுள் என் அண்ணன் இருந்தார். எனது அண்ணன் லாரியின் அடியில் தலை நசுங்கி உடல் நசுங்கி இருந்தார். 10 நபர் சேர்ந்து வண்டியை எடுக்க முயற்சித்தோம். வண்டியை எடுக்க முடியவில்லை. நாங்கள் தீயணைப்பு துறையினருக்கு தகவல் சொல்லி அவர்கள் வந்து நசுங்கிய என் அண்ணனையும் விபத்து ஏற்படுத்திய டிரைவரையும் மீட்டெடுத்தார்கள். பின்பு அதே வண்டியில் எனது அண்ணனையும் காயமற்ற லாரி ஓட்டிய நபரையும் கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் நபர்தான் விபத்து நடந்த அன்று விபத்து ஏற்படுத்திய நபர் ஆவார். நான் அரசு மருத்துவமனையில் இருந்தபோது பிரேத சவக்கிடங்கில் உள்ள என் அண்ணன் பிரேதத்தின் மீது போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள். நான் உடனிருந்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

இவ்வழக்கில் இறந்துபோனவர் என் உடன் பிறந்த சகோதரர் ஆவார். இருவரும்

தனித்தனியாக வசித்து வருகிறோம். மறுநாள் அரசு மருத்துவமனையில் புகார் கொடுத்தோம். நான் கையொப்பம் செய்தேனா என்றால் செய்தேன். நான் கடையில் இருந்து வந்தேன் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சம்பவ இடம் எங்கள் வீடே இல்லை என்றாலும் அதனால் தான் மாதிரி வரைபடத்தில் எனது வீடு குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல. 10 நபர்களும் நானும் சேர்ந்து வண்டியை தூக்கினோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சம்பவத்தில் என் அண்ணனின் தலை நசுங்கி இருந்தது என்று போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. உடல் நசுங்கி தலையில் காயம் இருந்ததாக சொன்னேன். மாயாண்டி தர்பூசணி கடைக்கும் என் அண்ணன் வீட்டிற்கும் 5 அடி தூரம் இருக்கும். அந்த 5 அடி இடைவெளியில் தான் விஜயகுமார் வீடு, ராஜி வீடு, குமார், முருகையன் ஆகியோர் வீடு உள்ளதா என்றால் உள்ளது. என் வீடு இல்லை என்றால் என் வீடு நடுவில் உள்ளது. எனது அண்ணன் வீடு பழைய காலத்து கூரை வீடா என்றால் இல்லை. மெத்தை ஒட்டி முன்னால் கூரை போட்டு இருந்தார்கள். அது பழைய வீடு அல்ல. எனது அண்ணன் வீட்டருகே இருந்த மின்கம்பம் பழைய காலத்து மின்கம்பம் என்றால் சரியல்ல. புதிய மின்கம்பம். நான் எதிரியை முதன் முதலாக நீதிமன்றத்தில் தான் பார்க்கிறேன் என்றாலும் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்றாலும போலிசாரின் வேண்டுகோளுக்கிணங்க பார்த்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அணணன் வீட்டருகே இருந்த பழைய காலத்து மின்கம்பம் விழுந்துதான் என் அண்ணன் இறந்தார் என்றாலும் விபத்திற்கும் என் அண்ணன் இறப்பிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் விபத்திற்கும் சம்மந்தமில்லை என்றாலும் எதிரி அந்த விபத்து வாகனத்தை ஓட்டவில்லை என்றாலும் இறந்துபோனவர் என் அண்ணன் என்பதால் நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை:</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III
Cuddalore.

## **Deposition of Witness**

**(Chapter XXXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.60 /2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : LW6 / PW5 |
| Name | : Mayandi |
| Father Name/Husband Name | : Natesan |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.04.2022

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முத ன்மை விசாரணை:-</u>**

நான் தற்போது கம்மியன்பேட்டை குப்பன்குளம் சமாதிதோப்பில் வசித்து வருகிறேன். நான் தர்பூசணிபழம் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். 30.03.2014 ம் தேதி மதியம் 01.30 மணியளவில் குப்பன்குளம் சமாதிதோப்பில் அந்த ஒருவழி பாதையின் ரோட்டின் வளைவில் நான் தர்பூசணி பழம் கடை வைத்துள்ளேன். அந்த ஒருவழிப் பாதையில் மீன்பாடி வண்டி வேகமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து வளைவில் வளையாமல் நேராக வந்து பழம் விற்றுக்கொண்டிருந்த என் மீது மோதியது. அதனால் எனக்கு வலது கை, வலது காலில் பலத்த அடிப்பட்டது. பின்பு அந்த வண்டி அதே வேகத்துடன் மின்கம்பத்தின் மீது மோதி ராமு என்பவர் வீட்டின் மீது சாய்ந்தது. வீட்டிலிருந்த ராமு வண்டி சாய்ந்ததால் இறந்துவிட்டார். என் மீது வண்டி மோதியதால் எனக்கு மயக்கமாக இருந்ததால் மற்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது. மயக்கமடைந்த என்னை யார் மருத்துவனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்று எனக்கு தெரியவில்லை. கடலூர் அரசு மருத்துவனையில் சிகிச்சையில் இருந்தேன். பிறகு அங்கிருந்து டாக்டர். சிவசுப்ரமணியன் என்பவரிடம் சிகிச்சைக்கு சென்றேன். எனக்கு அங்கு வலது கை தோள்பட்டை முறிந்ததால் கையில் பிளேட் வைத்து ஆப்பரேஷன் செய்தார்கள். அதே போல் வலது கால் முறிந்ததால் வலது காலிலும் பிளேட் வைத்து ஆப்பரேஷன் செய்தார்கள். எனக்கு விபத்து நடந்தபோது நான் மயக்கத்தில் இருந்ததால் விபத்து ஏற்படுத்திய நபரைப் பற்றிய விவரம் எதுவும் எனக்கு தெரியாது. நான் சிகிச்சையில் இருந்தபோது என்னிடம் விபத்து ஏற்படுத்திய நபர் செல்லங்குப்பத்தை சேர்ந்த முரளி என்று

கூறினார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் பைபாஸ் ரோடு வளையில் கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. கடலூர் GH ல் ஒரு நான் சிகிச்சையில் இருந்தேன். டாக்டர். சிவசுப்ரமணியன் மருத்துவமனையில் 20 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நஷ்ட ஈடு அதிகமாக பெறுவதற்காக மிகைப்படுத்தி சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கடைக்கும் இறந்துபோன ராமு என்பவர் வீட்டிற்கும் 20 அடி தூரம் இருக்கும். நடுவில் யார் யார் வீடு உள்ளது என்று எனக்கு தெரியாது. வாகனம் ஓட்டிய டிரைவர் பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது. தற்போதும் தெரியாது. நான் சட்டவிரோதமாக கடை வைத்திருந்ததான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. விபத்திற்கும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றி எனக்கு எதுவும் எனக்கு தெரியாது. நான் மயக்கமடைந்துவிட்டேன். போலிசார் விசாரணையில் சிவசுப்ரமணியன் மருத்துவனைக்கு சென்றேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>:**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III
Cuddalore.

# Deposition of Witness

**(Chapter XXXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.60 /2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : LW8 / PW6 |
| Name | : Kumar |
| Father Name/Husband Name | : Shanmugam |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.04.2022

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முத ன்மை விசாரணை:-</u>**

நான் தற்போது கம்மியன்பேட்டை குப்பன்குளம் சமாதிதோப்பில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் வேலை வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன ராமு என்பவரை எனக்கு தெரியும். 30.04 வருடம் சரியாக ஞாபகமில்லை. சுமார் 7 வருடத்திற்கு முன்பு அப்போது மதியம் 01.00 மணி இருக்கும். இவ்வழக்கில் இறந்துபோன ராமு என்பவரின் வீட்டின் பக்கத்து வீட்டில் வசித்து வருகிறேன். விபத்து நடந்தபோது நான் வீட்டின் வெளியே இருந்தேன். பைப்பாஸ் ரோட்டிலுள்ள ஒருவழிப்பாதையில் மீன்பாடி வண்டி வேகமாக வந்து அந்த வண்டி அங்கு பழம் விற்றுக்கொண்டிருந்த மாயாண்டி என்பவரின் மீது மோதியது. அதனால் மாயாண்டிக்கு வலது காலிலும், வலது கையிலும் அடிப்பட்டது. பிறகு அந்த வண்டி ராமு வீட்டின் மீது விழுந்துவிட்டது. ராமுவை எடுக்க முடியவில்லை. ராமு அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். பிறகு நாங்கள் தீயணைப்பு துறையினருக்கு போன் செய்து அவர்கள் வந்து அந்த மீன்பாடி வண்டியையும், இறந்த ராமுவையும் எடுத்தார்கள். மீன்பாடி வண்டி ஓட்டி வந்த நபரையும் தீயணைப்பு துறையுடன் சேர்ந்து நாங்கள் மீட்டோம். பிறகு இறந்த நபரையும், மீன்பாடி வண்டி ஓட்டுநரையும் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அதே வண்டியில் அனுப்பி வைத்தோம். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் நபர்தான் விபத்து நடந்த நாளன்று வாகனத்தை ஓட்டிய நபர் ஆவார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

ஊர்காரர்கள் தான் தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தார்கள். சம்பவ இடத்தில் 20 பேர்கள் இருந்திருப்பார்கள். போலிசாரிடம் அங்குள்ள மக்கள் எல்லோரும் சேர்ந்து தான் புகார் கொடுத்தோம். ஆனால் போலிசார் என்னை விசாரித்தார்கள். மாயாண்டி தர்பூசணி கட் செய்து விற்றுவந்தார். ஜூஸ் போட்டு கொடுப்பதில்லை. இறந்து போன ராமுவின் வீடு பழைய கூரை வீடு என்றால் சரிதான். அங்கிருந்த மின்கம்பமும் பழையது என்றால் இல்லை. புதியது. மாயாண்டி தர்பூசணி கடைக்கும் சம்பவ இடத்திற்கும் 5,6 அடி தூரம் இருக்கலாம். மாயாண்டி தர்பூசணி கடைக்கும் இறந்துபோன ராமு என்பவரின் வீட்டிற்கு இடையில் விஜயகுமார் வீடு, ராஜி வீடு, என் வீடு, முருகையன் வீடு உள்ளதா என்றால் அனைத்தும் அருகருகே உள்ளது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் இறந்துபோன ராமு எனது உறவினர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றாலும் பழைய மின்கம்பம் கூரை வீடு மீது சாய்ந்து ராமு இறந்துவிட்டார் என்றாலும் சரியல்ல. நான் முதன் முதலில் நீதிமன்றத்தில் தற்சமயம் தான் எதிரியை பார்க்கிறேன் என்றாலும், போலிசார் சொல்லிக்கொடுத்ததற்கிணங்க நான் எதிரியை தற்போது அடையாளம் காண்பிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ஆட்டோ டிரைவர் என்பதால் போலிசாருக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை:**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III
Cuddalore.